[22nd November 1963

திரு. ஆ. கு. சுப்பையா : இதில் சேர்ந்துள்ள ஆண்கள் எத்தனை பேர்கள்? பெண்கள் எத்தனை பேர்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரம் இப்போது என்னிடமில்லை.

பிரசவ விடுமுறை (மருத்துவ அத்தாட்சி)

***474 கேள்வி.—திரு. முனு ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க அலுவலகங்களில் பணி புரியும் மணமான பெண்களும், ஆசிரியைகளும் பிரசவத்திற்கான விடுமுறையில் செல்லும்போதும், பின்னர் வேலையில் மீண்டும் சேரும்போதும் மருத்துவ அத்தாட்சி கேட்கப்படுகிறதா?

(இ) ஆமெனில், அவ்வாறு வற்புறுத்தப்படுவதன் அவசிய மென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) The question does not arise.

திரு. முனு ஆதி : இப்படியில்லை என்று சர்க்கார் சொன்ன போதிலும், இதன் காரணமாக சம்பளம் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்பதை சர்க்கார் அறியுமா? ஆகவே பிரசவத்திற்காக மருத்துவ சர்டிபிகேட் தேவையில்லை என்பதை சர்க்கார் உணருகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரசவத்திற்காக போகின்றவர்களுக்கு சர்டிபிகேட் அவசியமில்லை.

கலைக்கல்லூரி (அரியலூர்)

***475 கேள்வி.—திரு. இரா. நாராயணன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் அரியலூரில் ஒரு கலைக் கல்லூரியை நிறுவ உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. இரா. நாராயணன் : ஸார், அரியலூர் வட்டாரத்தில் சுற்றியுள்ள இடங்களில் எல்லாம் 40 உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே சர்க்கார் அங்கு ஒரு கலைக்கல்லூரியை ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்குமா? இல்லையென்றால் இனிமேலாவது அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமா?